நிதிய முகாமையாளரின் மீளாய்வு

பொருளாதார மீளாய்வு

2025 ஆம் ஆண்டானது பல்வேறு உலகளாவிய பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நிகழ்வுகளினால் வடிவமைக்கப்பட்டது. பாரிய மத்திய வங்கிகள் தொடர்ந்தும் நாணயக் கொள்கைகளை செம்மையாக்கியதுடன், தளர்வடையும் பணவீக்க அழுத்தங்களுக்கு மத்தியில் வளர்ச்சிக்கு துணைபுரிவதற்காக தாராளமான நிலைப்பாட்டினை பராமரித்தன. முறிகள் சந்தைகள், குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவில், இறைவரி பற்றாக்குறைகள், கடன் நிலைபேறுடைமை மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை முதலீட்டாளர்கள் மதிப்பிடும்போது, தளம்பலுடன் காணப்பட்டன. பண்டங்கள் சந்தையில், எண்ணெய் விலைகள் ஒப்பீட்டளவில் நிலையாக காணப்பட்டதுடன், இதற்கு மிதமான கேள்வி வளர்ச்சியும் மற்றும் OPEC அல்லாத நாடுகளிலிருந்தான தொடர்ச்சியான உற்பத்தியும் துணையளித்தன. புவிசார் அரசியல் பதற்றங்கள், குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவும் ஈரானுக்கும் இடையே உயர்வடைந்து காணப்பட்டதுடன், இராஜதந்திர பேச்சுவார்த்தைகளது வரையறையான முன்னேற்றமும் உலகளாவிய உறுதியின்மையினை அதிகரித்தது.

இலங்கையின் பொருளாதாரமானது 2025 இல் மூன்று துறைகளிலுமான பரவலான விரிவாக்கத்தினால் துணையளிக்கப்பட்டு 5.0%[1] (வருடத்தில் இருந்து வருட – வ.இ.வ.) வளர்ச்சியினை பதிவுசெய்தது. கைத்தொழில் துறையானது இந்த வளர்ச்சிக்கு முன்னிலை வகித்து ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியான 7.8%[1] இனையும், அதனைத் தொடர்ந்து சேவைகள் துறையானது 3.3%[1] ஆல் வளர்ச்சியடைந்த வேளை வேளாண்மைத் துறையானது ஒரு மிதமான 1.4%[1] ஆல் விரிவடைந்தது. இந்த வளர்ச்சி உத்வேகமானது வலுவான சுற்றுலாத்துறை நடவடிக்கை மற்றும் தொழிலாளர் பணமனுப்பல்களினால் மேலும் துணையளிக்கப்பட்டு பொருளாதார நடவடிக்கையினை மேலுயர்த்தியது. இதன் பிரகாரம், ஆண்டின் இறுதிப் பாகத்தின்போது டிட்வா புயலினால் ஏற்பட்ட இடையூறுகள் காணப்பட்டபோதிலும் பொருளாதாரமானது சிறந்த மீளெழுச்சியினை வெளிப்படுத்தியது.

2024 தேர்தல்களைத் தொடர்ந்து அரசாங்கமானது முக்கிய கொள்கை மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை மேம்படுத்துவதனைத் தொடர்ந்து 2025 இல் அரசியல் சூழலானது நிலைத்தன்மையாக காணப்பட்டது. இறைவரி ஒருங்கிணைத்தல் மற்றும் ச.நா.நி. இன் நீடிக்கப்பட்ட நிதியளித்தல் வசதியின் (EFF) கீழான கட்டமைப்பசார் சீர்திருத்தங்கள் என்பன நாட்டின் பாரியபொருளாதார கட்டமைப்பினை பலப்படுத்துவதற்கு உதவின. இலங்கை அதன் மேம்பட்ட கடன் தோற்றுருவத்தினை பராமரித்ததுடன், விட்ச் ரேட்டிங்ஸ் CCC+ தரத்தினை பராமரித்தது. இது கடன் நிலைபேறுடைமை, பொது நிதியளித்தல் நிலைத்தன்மை மற்றும் முதலீட்டாளர் நம்பகத்தன்மை என்பவற்றில் தொடர்ச்சியான முன்னேற்றங்களை பிரதிபலித்தது.


LMD-PEPPERCUBE BCI
FIVE YEARS TO DECEMBER 2025
250
215
180
145
110
75
40
12/20
4/21
8/21
12/21
4/22
8/22
12/22
4/23
8/23
12/23
4/24
8/24
12/24
4/25
8/25
12/25


Purchasing Manager Indices
80
70
60
50
40
30
20
Jan 2025
Feb 2025
Mar 2025
Apr 2025
May 2025
Jun 2025
Jul 2025
Aug 2025
Sep 2025
Oct 2025
Nov 2025
Dec 2025
PMI - Manufacturing
PMI - Services
PMI - Construction
Neutral Threshold


Index of Industrial Production
105
100
95
90
85
80
Jan 2025
Feb 2025
Mar 2025
Apr 2025
May 2025
June 2025
July 2025
Aug 2025
Sep 2025
Oct 2025
Nov 2025
Dec 2025





சி டி ஸ்மித் எஸட் மெனேஜ்மன்ட் இனால் கண்காணிக்கப்பட்ட உயர் நிகழ்வெண் தரவானது நேர்மறையினை காண்பித்தது.

<u>வட்டி வீதச் சூழல்</u>

இலங்கை மத்திய வங்கி 2025 இல் அதன் தாராளமயமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை தொடர்ந்தது. இதற்கு சீரமைவாக, ஓரிரவு கொள்கை வட்டி வீதமானது (ORR) மே 2025 இல் 25 அடிப்படை புள்ளிகளால் குறைக்கப்பட்டு 7.75%[2] ஆக காணப்பட்டதுடன், பணவீக்கமானது நேர்மறையான இடத்திற்கு திரும்பி மத்திய கால இலக்கை நோக்கி நெருங்கியபோது, வட்டி வீதத்தினை வருடம் முழுவதும் அதே மட்டத்தில் பராமரித்தது. தாராளமயமான நாணயக் கொள்கையினை பிரதிபலித்து, அரசாங்கப் பிணையங்கள் உள்ளடங்கலான சந்தை வட்டி வீதங்கள் 2025 இன் போது பரவலாக

கீழ்நோக்கி செம்மையாக்கப்பட்டன. எவ்வாறாயினும், வருடத்தின் இறுதிப் பாகத்தில் டிட்வா புயலின் பின்னரான மீட்டல் முயற்சிகளுக்கான உயர்வான அரச கடன்பெறுகை எதிர்பார்ப்புகளின் காரணமாக குறுங்கால வட்டி வீதங்களில் ஒழுங்கற்ற தன்மை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் வருடத்தின் இறுதியில் 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் முதிர்வுகளுடைய திறைசேரி உண்டியல்களுக்கான விளைவுகள் முறையே 7.74%[2], 8.27%[2] மற்றும் 8.45%[2] ஆக காணப்பட்டன.

உள்ளூர் பணச்சந்தை திரவத்தன்மையானது 2025 இன் போது சில தளம்பலுடன் மிகையாகக் காணப்பட்டதுடன், இதற்கு பெரும்பாலும் இலங்கை மத்திய வங்கியின் தேறிய அந்நிய செலாவணி கொள்வனவுகள் துணையளித்தன. தனியார் துறைக்கான கடன் வழங்கலானது ரூ. 2.1[2] டிரில்லியனால் அதிகரித்து 2024 இன் மீது 25.2%[2] அதிகரிப்பினை பிரதிநிதித்துவம் செய்தது. இதற்கு காரணமாக பொருளாதார நடவடிக்கைகளிலான விரிவாக்கமும் வாகன இறக்குமதிகளுக்கான அதிகரித்த கேள்வியும் காணப்பட்டன.





<u>பணவீக்கம்</u>

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியினால் அளவிடப்படும் தலைப்பு பணவீக்கமானது (CCPI, 2021 =100) முன்னைய ஆண்டில் காணப்பட்ட பணச்சுருக்கக் காலத்தினைத் தொடர்ந்து 2025 இன் போது ஒரு படிப்படியான மீட்டலைக் காண்பித்தது. வருடத்தின் ஆரம்ப மாதங்களில் பணவீக்கமானது எதிர்மறையாகக் காணப்பட்டதுடன், இது மந்தமான கேள்வி மற்றும் வலு மற்றும் போக்குவரத்து விலைகளிலான வீழ்ச்சியினை பிரதிபலித்தது. எவ்வாறாயினும், ஆண்டின் இரண்டாம் பாதியில் பணவீக்கமானது மீளெழுவதற்கு ஆரம்பித்ததுடன், இதற்கு துணையாக தளர்வடைந்த பணச்சுருக்க அழுத்தங்கள், மின்சாரக் கட்டணங்கள் போன்ற நிர்வகிக்கப்படும் விலைகளுக்கான செம்மையாக்கல்கள் மற்றும் சாதகமான புள்ளிவிபர அடித்தள விளைவுகள் காணப்பட்டன. இதன் பிரகாரம், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டி (CCPI) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டி (NCPI) என்பவற்றால் அளவிடப்படும் பணவீக்கமானது நேர்மறையாகத் திரும்பி வருடத்தின் இறுதியில் உயர்வடையும் போக்கினைக் காண்பித்தது. டிசம்பர் 2025 அளவில் CCPI அடிப்படையிலான தலைப்பு பணவீக்கமானது 2.1%[2] ஆகவும் NCPI அடிப்படையான தலைப்பு பணவீக்கமானது 2.9%[2] ஆகவும் அதிகரித்தன. வழங்கல் இடையூறுகள் மற்றும் பருவகால கேள்வியினால் ஏற்பட்ட சில தற்காலிக உணவு விலை அழுத்தங்கள் இருந்தபோதிலும், இவ்வாண்டின்போது ஒட்டுமொத்த பணவீக்கமானது மிதமானதாகவும் மத்திய கால இலக்கான 5%[2] இலும் பார்க்க மிகவும் குறைவானதாகவும் காணப்பட்டது.





<u>வெளிவாரித் துறை</u>

வெளிவாரித் துறையானது 2025 இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவுசெய்தது. இதற்கு தொழிலாளர்கள் பணமனுப்பலிலான வலுவான உட்பாய்ச்சல்கள், சுற்றுலாத்துறை மற்றும் சேவைகள் ஏற்றுமதிகள் துணையளித்தன. நடைமுறை கணக்கானது வருடத்திற்கு ஒரு மதிப்பிடப்பட்ட மிகையாக US$ 1.7 பில்லியனை பதிவுசெய்தவேளை, இது பண்டங்களின் வர்த்தகத்தில் தொடர்ச்சியான சவால்கள் இருந்தபோதிலும் மேம்பட்ட அந்நிய செலாவணி உட்பாய்ச்சல்களை பிரதிபலித்தது. ஏற்றுமதி வருமானங்கள் 2025 இல் வரலாற்று ரீதியாக உயர்ந்த மட்டங்களை எட்டின. எவ்வாறாயினும், வர்த்தகப் பற்றாக்குறையானது அண்ணளவாக US$ 7.9 Bn[2] ஆக விரிவடைந்தது. இதற்கு இறக்குமதிச் செலவினமானது ஏற்றுமதி வருமானத்திலும் பார்க்க விரைவான வேகத்தில் வளர்ச்சியடைந்ததுடன், நுகர்வுப் பொருட்கள் மற்றும் வாகனங்களுக்கான உயர்வடைந்த கேள்வியும் காரணமாயிருந்தன. அதேநேரத்தில், தொழிலாளர் பணமனுப்பல்கள் US$ 8 Bn[2] இனை விஞ்சியதுடன், இது ஒரு கணிசமான அந்நிய செலாவணி மூலத்தை வழங்கியவேளை, 2018 இல் பதிவுசெய்த நெருக்கடிக்கு முன்னரான மட்டங்களை விஞ்சிய சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் சுற்றுலாத்துறை உழைப்புகள் 2024 உடன் ஒப்பிடும்போது 1.6%[2] ஆல் வளர்ச்சியடைந்தன.

மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் 2025 இன் இறுதியில் US$ 6.8 Bn[2] ஆக அதிகரித்தது. தொடர்கின்ற வெளிவாரி கடன் சேவைக் கொடுப்பனவுகளுக்கு மத்தியில் பலதரப்பு நிறுவனங்களிலிருந்தான பெறுகைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தேறிய அந்நிய செலாவணி கொள்வனவுகள் பிரதானமாக துணையளித்தன. நாணயத்தைப் பொறுத்தளவில், இலங்கை ரூபாயானது 2025 இன் போது 5.6%[2] ஆல் பெறுமதியிழந்து வருடத்தின் இறுதியில் அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிராக ரூ. 309.99[2] ஆக காணப்பட்டது. அதேவேளை, அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலான வெளிநாட்டு முதலீடுகள் 2024 இல் பதிவுசெய்த தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடும்போது US $ 248 மில்லியனை[2] தேறிய உட்பாய்ச்சலாக பதிவு செய்தது.

காட்சிப்படுத்தல் 01: வெளிவாரித் துறை செயற்திறனின் சுருக்கம்[2]

பிரிவு	2024 USD மில்.	2025 USD மில்.	மாற்றம் %
வணிகச்சரக்கு ஏற்றுமதிகள்	12,772	13,581.4	6.3
வணிகச்சரக்கு இறக்குமதிகள்	18,841.4	21,479.9	14.0
வர்த்தக மீதி	-6,069.4	7,898.6	
தொழிலாளர் பணமனுப்பல்கள்	6,575.4	8,076.2	22.8
சுற்றுலாத்துறை உழைப்புகள்	3,168.6	3,219.2	1.6
நடைமுறை கணக்கு மீதி	1,205.7	1,733.4	43.8

<u>இறைவரித் துறை</u>

இறைவரித் துறை செயற்திறனானது வலுவான வருவாய் அடிப்படையிலான ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகளினால் துணையளித்து 2025 இல் மேலும் பலப்படுத்தப்பட்டது. அரசாங்க வருவாயானது 2025 இல் 34.1% (வ.இ.வ.)[2] ஆல் அதிகரித்தது. இது பிரதானமாக வரி வருமானத்தினால் இயக்கப்பட்டவேளை மொத்த செலவினமானது ஓரளவு 1.6% (வ.இ.வ.)[2] ஆல் அதிகரித்து இது சம்பளங்கள், கூலிகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளிலான அதிகரிப்பினை பிரதிபலித்தது. இதன் பிரகாரம், ஒட்டுமொத்த இறைவரி பற்றாக்குறையானது ரூ. 744.86 பில்லியனுக்கு[2] ஒடுங்கி 2025 இன் இறுதியில் ஒரு முதன்மையான மிகையாக ரூ. 1,755.81 பில்லியன்[2] காணப்பட்டது.

இறைவரித் துறையானது டிட்வா புயலின் பின்னரான மீட்பு முயற்சிகளிலிருந்து அழுத்தங்களுக்கு முகங்கொடுத்தது. இது வாழ்வாதாரங்களை மீட்டெடுத்தல் மற்றும் சேதமடைந்த உட்கட்டமைப்பினை மீள்கட்டியெழுப்புதல் என்பவற்றை உள்ளடக்கும். அரசாங்கமானது. இலக்குவைத்த நிவாரண நடவடிக்கைகளையும் மீள்கட்டமைப்பு முன்னெடுப்புகளையும் அமுலாக்கியதுடன், இதுற்கு 2025 இல் காணப்பட்ட பிரதான மிகையின் அதிக செயல்திறன் துணையளித்தது. மேலாக, பாதீடு 2026 இற்கு ஒரு மிகைநிரப்பி மதிப்பீடாக ரூ. 500 பில்லியன்[2] அங்கீகரிக்கப்பட்டதுடன், இது நடைமுறையிலுள்ள காசு இடைத்தாங்கிகளூடாக நிதியளிக்கப்படவுள்ளவேளை, கடன்பெறுகை வரையறையும் மாற்றமின்றி பராமரிக்கப்பட்டது.

காட்சிப்படுத்தல் 02: இறைவரித் துறைச் செயற்திறனின் சுருக்கம்[2]

பிரிவு	2024 ரூ. பில்.	2025 ரூ. பில்.	மாற்றம் %
மொத்த வருவாய்	4,090.81	5,485.55	34.1%
மொத்த செலவினம்	6,130.74	6,230.41	1.6%
பிரதான மீதி	649.57	1,755.81	170.3%
ஒட்டுமொத்த பாதீட்டு மீதி	(2,039.93)	(744.86)	-63.5%

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (கொ.ப.ப.) செயற்திறன் - 2025



கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது, ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து முன்னைய ஆண்டில் காணப்பட்ட சாத்தியமான உத்வேகத்தை நீடிக்கும் விதமாக 2025 இனை ஆரம்பித்தது. 2025 முதலாம் காலாண்டின் இறுதிப் பாகத்தில், சந்தையானது முன்னைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட பருவகால போக்குகளுக்கு சீரமைவாக சில இலாபமீட்டல்களை அனுபவித்தது. அமெரிக்காவினால் எதிர்பாராத விதமாக அறிவிக்கப்பட்ட பரஸ்பர சுங்கவரியினைத் தொடர்ந்து ஏப்ரல் 2025 இல் சந்தையானது ஒரு

கடுமையான வீழ்ச்சியினை சந்தித்துடன் இந்நிலைமையானது இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான உயர்வடையும் புவிசார் அரசியல் பதற்றங்களினால் மேலும் மோசமடைந்தது.

எவ்வாறாயினும், அதன்பின்னர் சந்தை கருத்துப்போக்கானது மேம்பட்டது. இதற்கு ச.நா.நி. இடமிருந்து பெறப்பட்ட நான்காம் தவணை நிதி, CCC+ இற்கு தரமுயர்த்தப்பட்ட இறையாண்மை கடன் தரம் மற்றும் அமெரிக்க சுங்கவரியின் 44% இலிருந்து 20% ஆக பிறப்பட்ட திருத்தம் என்பன துணையளித்தன. இந்த முன்னேற்றங்களுடன் வலுவான உள்ளூர் முதலீட்டாளர் பங்குபற்றல் மற்றும் மேம்பட்ட கூட்டாண்மை இலாப எதிர்பார்ப்புக்களும் சேர்ந்து ஒரு நிலைபேறான சந்தை மீளுயர்விற்கு பங்களிப்பு செய்ததுடன், இது நவம்பர் 2025 வரை தொடர்ந்தது. வருடத்தின் இறுதிப் பாகத்தில், டிட்வா புயலின் பொருளாதார தாக்கத்தின் காரணமாக சந்தையானது குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினை பதிவுசெய்தது. இருந்தபோதிலும், ச.நா.நி. இன் விரைவான நிதியளித்தல கருவியின் (RFI) கீழ் அவசர நிதியளித்தல் உதவியின் பெறுகையினைத் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்ட உத்வேகம் அவதானிக்கப்பட்டு முதலீட்டாளர் நம்பிக்கையினை மீட்டமைப்பதற்கு துணைபுரிந்தது.

இதன் பிரகாரம், அனைத்து பங்கு விலைச்சுட்டி (ASPI) மற்றும் S&P SL20 சுட்டிகள் இவ்வாண்டினபோது புதிய மைல்கற்களை விஞ்சின. இது வங்கியியல், பன்முகப்படுத்தப்பட்ட நிதியியல் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட உற்பத்தித் துறைகளிலான பரந்தளவு பங்குபற்றலை பிரதிபலித்தது. டிசம்பர் 2025 இன் இறுதியில், 2024 உடன் ஒப்பிடும்போது ASPI ஒரு அதிகரிப்பான 41.89%[1] இனையும் மிகவும் திரவத்தன்மை சுட்டியான S&P SL 20, 26.64%[1] அதிகரிப்பினையும் கண்டன. சந்தை மூலதனமயமாக்கலானது கணிசமாக விரிவடைந்து 2025 இன் இறுதியில் ரூ. 8068.62 பில்லியனை[3] எட்டியது. ஒட்டுமொத்தத்தில் 2025 ஆம் ஆண்டானது இலங்கையின் உரித்துவச் சந்தையில் ஒரு வலுவான மீட்டல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆண்டாக குறிப்பிடப்பட்டது.

<u>சி.டி. ஸ்மித் வளர்ச்சி உரித்துவ நிதியம் (ஆரம்பம் 27 பெப்ரவரி 2012)</u>

<u>நிதிய முகாமையாளர்</u>

குகன் விநாயகசுந்தரம்

<u>நிதியத்தின் குறிக்கோளும் அளவுகோலும்</u>

இந்நிதியமானது ஒரு திறந்த வளர்ச்சி நிதியமாகும். இது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள உரித்துவப் பிணையங்களின் ஒரு பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுத் தேக்கத்தில் முதலீடு செய்கின்றது. இதன் குறிக்கோள் மத்திய நீண்ட காலத்தில் மூலதன மதிப்பேற்றத்தை அடைவதாகும்.

<u>கருத்துரை</u>

நிதியத்தின் விளைவும் அளவுகோல் விளைவும்



<u>நிதியத்தின் கட்டணங்கள்</u>

முகாமைத்துவக் கட்டணம் 2.25% p.a (தேறிய சொத்துப் பெறுமதியின் % ஆக)

காப்பாளர் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டணம் 0.30% p.a (தே.சொ.பெ. இன் % ஆக)

காட்சிப்படுத்தல் 04: நிதியத்தின் விளைவு எதிர் அளவுகோல் விளைவு

காலம்*	நிதியம்	அளவுகோல்		
		ASPI	S&P SL 20	ASTRI
YTD – 2025	**33.10%**	41.89%	26.64%	49.06%
ஆரம்பத்திலிருந்து திரண்டது	**337.99%**	313.11%	108.33%	417.09%
ஆரம்பத்திலிருந்து CAGR	**11.25%**	10.78%	5.44%	12.63%

குறிப்பு: அனைத்து பங்கு விலைச் சுட்டி (ASPI), அனைத்து பங்கு மொத்த விளைவுச் சுட்டி (ASTRI) மற்றும் S&P ஸ்ரீலங்கா 20 சுட்டி (S&P SL 20) என்பன 31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான கொ.ப.ப. இன் தரவுகளின் அடிப்படையிலாகும்.

** செயற்திறன்கள் 31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான மாத இறுதி விலைகளின் அடிப்படையிலாகும். இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள் செயற்திறன் தரவுகள் கடந்தகால செயற்திறனை பிரதிநிதித்துவம் செய்வதுடன் இது எதிர்கால விளைவுகளுக்கான ஒரு உத்தரவாதமல்ல..*

31 டிசம்பர் 2025 இல் நிறைவடைந்து காலத்திற்கு நிதியமானது 33.10% ஆல் அதிகரித்தவேளை, ASPI மற்றும் S&P SL 20 சுட்டிகள் முறையே 41.89%[3] மற்றும் 26.64%[3] ஆல் அதிகரித்தன. ஆரம்பத்திலிருந்து நிதியமானது ஒரு மொத்த விளைவாக 337.99% இனை வழங்கியுள்ளதுடன் இது அதேகாலப்பகுதியில் காணப்பட்ட அனைத்து பங்கு விலைச் சுட்டியின் செயற்திறனான 313.11% இனை விஞ்சியுள்ளது.

காட்சிப்படுத்தல் 05: 31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான நிதியத்தின் முதல் 5 முதலீடுகள்

தே.சொ.பெ. இன் அடிப்படையில் முதல் 5 உரித்துடைமைகள்		
பங்கு	**TICKER**	**% OF NAV**
டிஜிட்டல் மொபிலிட்டி சொலுூசன்ஸ் லங்கா பிஎல்சி	PKME.N0000	**6%**
கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி	COMB.N0000	**6%**
ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி	HNB.N0000	**6%**
எக்சஸ் என்ஜினியரிங் பிஎல்சி	AEL.N0000	**6%**
ஏசிஎல் கேபள்ஸ் பிஎல்சி	ACL.N0000	**5%**

காட்சிப்படுத்தல் 06: 31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான நிதியத்தின் துறைகளுக்கான ஒதுக்கீடு

துறைகளுக்கான ஒதுக்கீடு (காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளுடன்)



மீளாய்வுக் காலத்தின்போது, நிதியமானது, வீழ்ச்சியடையும் வட்டி வீதச் சூழல், மேம்பட்ட பாரியபொருளாதார நிலைமைகள் மற்றும் வலுவான இறைவரித்துறை செயற்திறன் என்பவற்றுக்கு பதிற்செயலாக, உரித்துவங்களுக்கான அதன் சொத்து ஒதுக்கீட்டினை அதிகரித்தது. அதேநேரத்தில், நிதியமானது சந்தை உச்சங்களின்போது மூலோபாயமாக இலாபங்களை எய்தப்பெற்றும் சந்தை பலவீனத்தின்போது முதலீடுகளை அதிகரித்தும் ஒழுக்கமான அணுகுமுறையினை கடைப்பிடித்தது. இதன் பிரகாரம், 2025 இன் ஆரம்பத்தில் சந்தை உச்சங்களின்போது நிதியமானது வங்கியியல் துறை மற்றும் ஏனைய துறைகளிலும் சில இலாபங்களை எய்தப்பெற்று ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அவதானிக்கப்பட்ட சந்தை பலவீனங்களின்போது தெரிவுசெய்யப்பட்ட சில பங்குகள் நோக்கி முதலீடுகளை மீள் ஒதுக்கீடு செய்தது. மேலாக, டிட்வா புயலினைத் தொடர்ந்து சந்தை வீழ்ச்சிக்கு மத்தியில் நிதியமானது மூலோபாயமாக, கட்டுமானம் மற்றும் கட்டுமானம் தொடர்பான கம்பனிகளில் அதன் முதலீடுகளை அதிகரித்தது. இது உட்கட்டமைப்பு மீள்கட்டியெழுப்பல் நடவடிக்கைகளில் எதிர்பார்த்த அதிகரிப்பிலிருந்து நலனடைவதற்காகும். இதன் பிரகாரம், டிசம்பர் 2025 இன் இறுதியில் உரித்துவத்திற்கான நிதியத்தின் வெளிப்பாடானது 91% ஆக காணப்பட்டது.

முன்னோக்கிப் பார்க்கும்போது, உரித்துவ சந்தைகளுக்கான எதிர்கால வாய்ப்பு நெருங்கிய காலத்தில் சாதகமாக காணப்படுகின்றது. இதற்கு, குறைவான வட்டி வீதச் சூழல் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் இருந்தபோதிலும் தொடர்ச்சியான வலுவான கூட்டாண்மை இலாபங்கள் என்பன துணைபுரியும். உரித்துவங்கள் வரிச் சிக்கனமான முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குவதுடன், மேலும் உள்ளூர் முதலீட்டாளர்களினால் நிலையான வருமானப் பிணையங்களிலிருந்து உரித்துவங்கள் நோக்கிய படிப்படியான நகர்வும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த எதிர்கால வாய்ப்பினைக் கருத்திற்கொண்டு, நிதியமானது சாத்தியமான மேல்நோக்கிய வாய்ப்பில் பயன்பெறுவதற்கும் அலகுடைமையாளர்களுக்கு நீண்டகால பெறுமதியினை வழங்குவதற்கும் உரித்துவ முதலீடுகளில் மிகைநிறையாக இருக்கும்.

31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான நிதியத்தின் மொத்த தேறிய சொத்தின் பெறுமதியானது ரூ. 156.61 மில்லியன் ஆகும் என்பதுடன் நிதியத்தில் 237 அலகுடைமையாளர்கள் உள்ளார்கள். 31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான நிதியத்தின் அலகொன்றின் மீட்டல் விலை ரூ. 43.7989 ஆகும்.

மூலங்கள்